(2023-ஆம் கல்வியாண்டில் அனுமதிக்கப்பட்ட மாணவ-மாணவியருக்கு மட்டும்)

(பக்கங்களின் எண்ணிக்கை : 2)

SUBJECT CODE **23 UTM 204**

REG.NO:

**என்.ஜி.எம். கல்லூரி (தன்னாட்சி) : : பொள்ளாச்சி**

**பருவ இறுதித் தேர்வுகள் : மே - 2024**

**பி.ஏ. தமிழ் இலக்கியம்** **மதிப்பெண்கள் : 75**

**இரண்டாம் பருவம்** **நேரம் : 3 மணி**

## பகுதி – 3

## *சிற்றிலக்கியம்*

**பகுதி – அ** **(10x1=10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **(K1)**

1. *ஒரு களிற்றின்மேல் வரு களிற்றை ஒத்தவன் யார்?*

   *அ) கரிகாலன் ஆ) இ ராசேந்திரதேவன் இ) குலோ த்துங்கன் ஈ) இராச மகேந்திரன்*

2. *தேசம் ஐம்பத்தாறில் திசைச்சொல்………*

   *அ) 4 ஆ) 8 இ) 17 ஈ) 56*

3. *கூத்தாடும் நடராசரின் ஆனந்தத் தாண்டவத் திருவுருவத்தின் திருத்தோள்…….*

   *அ) 'ந'கரம் ஆ) 'சி'கரம் இ) 'ய'கரம் ஈ) 'வ' கரம்*

4. *'திரிகூடமலை' என்பது……..*

   *அ) இமயமலை ஆ) மேருமலை இ) பொதியமலை ஈ) திருமலை*

5. *காரைக்கால் அம்மையார் சுட்டும் உலகங்கள் எத்தனை?*

   *அ) 3 ஆ) 13 இ) 7 ஈ) 21*

**பின்வரும் வினாக்களுக்கு ஓரிரு வரிகளில் விடையளிக்க.** **(K2)**

6. *'ஆண்டலைப்புள்' என்பது?*
7. *'தாலப்பருவம்' என்பது யாது?*
8. *மயிலைக் காவலன் - பொருள் விளக்கம் தருக.*
9. *முக்கூடற்பள்ளு கூறும் ஏதேனும் மூன்று விதை வகைகளைக் கூறுக.*
10. கொங்கு நாட்டில் ஓடும் ஏதேனும் மூன்று நதிகளின் பெயர்களை எழுதுக.

(த.பி.பா.)

**பகுதி – ஆ** (5 x 5 = 25)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்குவிடையளிக்க.** (K3)

11. அ) *கலிங்கத்துப்பரணி கூறும் காளியின் ஆடை, அணிகலன்கள் குறித்து எழுதுக.*

**(அல்லது)**

ஆ) *முதுபேய் கண்கட்டு வித்தையைக் காட்டிய விதத்தை விளக்குக.*

12. அ) *எழுத்துகளின் பிறப்புக் குறித்துத் தமிழ்விடுதூது கூறுவதை எழுதுக.*

**(அல்லது)**

ஆ) *மீனாட்சியம்மையின் முத்தத்திற்கு ஒப்பாகாத பொருட்களாக குமரகுருபரர் கூறுவனவற்றை விளக்குக.*

13. அ) *திருக்கைலாய ஞான உலா சுட்டும் இறைவனின் திருக்கோலச் சிறப்பினை விவரிக்க.*

**(அல்லது)**

ஆ) *வாடைக்காற்றின் வருத்தத்தை நந்திக் கலம்பகத்தின்வழி விளக்குக.*

14. அ) *வசந்தவல்லி மன்மதனைப் பழித்துரைக்கும் விதத்தை விவரி.*

**(அல்லது)**

ஆ). *வடகரை, தென்கரை நாடுகளின் வளத்தை எழுதுக.*

15. அ) *சிவபெருமானின் பாம்பணியால் தான் கொள்ளும் அச்சம் குறித்த காரைக்கால் அம்மையாரின் கூற்றினை விவரி ?*

**(அல்லது)**

ஆ) *கொங்கில் வாழ்ந்த சித்தர்கள் குறித்து கொங்குமண்டல சதகம் கூறும் செய்திகளை எழுதுக.*

**பகுதி – இ** (5 x 8 = 40)

**பின்வரும் ஒவ்வொரு வினாவிலும் (அ) அல்லது (ஆ) வினாவிற்குவிடையளிக்க.** (K4/K5)

16. அ) *'கலிங்கத்துப்பரணியின் இரசபாரம்பரியம் ஓர் வரலாற்றுப் பெட்டகம்' எனும் கூற்றை நிறுவுக*

**(அல்லது)**

ஆ) *ஜெயங்கெண்டார் கையாளும் உவமைகள் குறித்து விவரிக்க.*

17. அ) *தமிழ்விடுதூது தமிழுக்கு அணியாக்கிச் சூட்டும் தமிழிலக்கியங்கள் குறித்துக் கட்டுரைக்க.*

**(அல்லது)**

ஆ) *பெண்பாற் பிள்ளைத் தமிழிற்குரிய சிறப்புப் பருவங்கள் குறித்த மீனாட்சியம்மைப் பிள்ளைத் தமிழின் கருத்துக்களைக் கட்டுரைக்க.*

18. அ) *இறைவனின் திருவுலாவின்போது எழுபருவப் பெண்களின் செயல்பாடுகளை விவரி.*

**(அல்லது)**

ஆ) *நந்திக் கலம்பகத்தில் இடம்பெறும் புராண வரலாற்றுச் செய்திகளை விவரிக்க.*

19. அ) *வசந்த வல்லிக்கும் பாங்கிக்கும் இடையே நடைபெறும் சொல்லாடலை விரித்துரைக்க.*

**(அல்லது)**

ஆ) *அழகர் நாட்டில் மழை, மழைவெள்ளத்தின் தாக்கத்தினை முக்கூடற்பள்ளின் வழிநின்று விவரி.*

20. அ) *சிவபெருமானின் உருவநிலை குறித்து அற்புதத் திருவந்தாதி கூறுவனவற்றைக் கட்டுரைக்க.*

**(அல்லது)**

ஆ) *கொங்கில் அமைந்துள்ள திருத்தலங்கள் குறித்து கொங்குமண்டலச் சதகத்தின்வழி விவரிக்க.*